சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம், எண்.1, காந்தி–இர்வின் சாலை, 9, எழும்பூர்,
சென்னை–8

மாதவரம் பேருந்து மற்றும் சரக்கு உந்து முனையத்தில் உள்ள காலி மனைகளுக்குகான மூடிமுத்திரையிடப்பட்ட புள்ளி மற்றும் ஏலம் மூலமான விற்பனை

.......

மாதவரம் பேருந்து மற்றும் சரக்கு உந்து முனையத்தில் மனை/கட்டிடம் ஒதுக்கீடு பெற மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் உள்ளது உள்ளபடியே என்ற நிலையில் விண்ணப்பங்கள் வரவேற்க படுகின்றன.

| | |
|---|---|
| விண்ணப்பம் வழங்கப்படும் நேரமும் தேதியும் | : 08.02.2010 லிருந்து 10.03.2010 வரை (காலை10.30 முதல் 3.00 மணிவரை ) |
| மூடிமுத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்படும் இறுதி நாளும் நேரமும் | : 10.03.2010 மாலை 3. 00 மணிவரை |
| மூடிமுத்திரையிடப்பட்ட ஒப்பந்தபுள்ளிகள் திறந்து ஏலம் நடத்தப்படும் நாளும் நேரமும் | : 10.03.2010 மாலை 3. 30 மணியளவில் |

ஒப்பந்தபுள்ளி பெறப்படும்.திறக்கப்படும் கடைசி நாள் பொதுவிடுமுறை நாளாக இருக்கும் தருவாயில் மறுவேலை நாளன்று ஒப்பந்தபுள்ளிகள் பெறப்பட்டு திறக்கப்படும்.

எந்த ஒரு காரணமும் கூறாமல் ஒன்று அல்லது அனைத்து ஒப்பந்த புள்ளிகளையுமே நிராகரிக்கவும் அல்லது கருத்துருவையே கைவிடவும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உரிமையை தக்க வைத்துக்கொள்கிறது.

ஒதுக்கீட்டு முறை, காலியாக உள்ள மனைகளின் விவரம், ஒதுக்கீட்டு நிபந்தனைகள் மற்றும் ஏலவிவரம் குறித்த விவரங்கள் முதன்மை செயல் அலுவலர் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம், சென்னை–8. அவர்களிடமிருந்து, முதன்மை செயல்அலுவலர் அவர்களின் பெயரில் பெறப்பட்ட100 /–க்கான கேட்புக்காசோலையுடன் வந்து பெற்றுக்கொள்ளலாம் மேலும் http://www.cmdachennai.gov.in/ எனும் குழுமத்தின் இணையதளத்திலிருந்தும் இறக்கம் செய்து கொள்ளலாம்.

முதன்மை செயல் அலுவலர்,
சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம்,
சென்னை–8.
தொ. பே. 044 – 28415618

...2.

மாதவரம் சரக்கு பேருந்து முனையத்தில் காலியாக உள்ள மனைகள்/கட்டிடம் விலை மற்றும் விவரங்கள் அடங்கிய படிவம்.

| வ.எ | விவரம் | கடை எண்ணிக்கை | பரப்பளவு ச.மீட்டரில் | குறைந்தபட்ச விலை(ச.மீட்டருக்கு) | பிணைவைப்புத் தொகை (10 ஏ.கு.விலையில்) |
|---|---|---|---|---|---|
| 1 | நிருவாகக் கட்டிடம் | 1 கடை | 942.25ச.மீ | ரூ. 36167ச.மீ | 35 இலட்சங்கள் |
| 2 | கடை (முகவர் அலுவலகக் கட்டிடம்) | 14 கடைகள் | 57,85முதல் 60.36ச.மீ | ரூ. 33500ச.மீ | 2 இலட்சங்கள் |
| 3 | தானியங்கிப் பணிமனை | 3 கடைகள் | 580 முதல் 624 ச.மீவரை | ரூ. 8500 ச.மீ | 5 இலட்சங்கள் |
| 4 | எடைமேடைக் கடைகள் | 1 கடை | 991 ச.மீ | ரூ. 8500ச.மீ | 8.5 இலட்சங்கள் |
| 5 | வணிக மனைகள் | 9 கடைகள் | 691 முதல் 1486 ச.மீ | ரூ. 8500 ச.மீ | 6 இலட்சங்கள் |

சென்னையில் செலுத்தத்தக்க வகையிலான முன்வைப்புத் தொகைக்கான வங்கி வரைவோலை/வங்கியர் காசோலை/வங்கி செலுத்தாணை போன்றவையே ஏற்கப்படும்.

விதிமுறைகளும் நிபந்தனைகளும்:

1) மூடி முத்திரையிட்டப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே, திறந்த ஏலத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும். மூடி முத்திரையிட்டப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறிப்பிடப்பட்ட அதிகப்படியான தொகையே திறந்த வெளி ஏலத்தில் ஆரம்ப விலையாக எடுத்துக் கொள்ளப்படும்.

2) வெற்றி பெற்ற ஏலம் கேட்டவர், தாம் செலுத்திய முன்வைப்பு பிணைத் தொகையை கழித்து மீதமுள்ள மனையின் விலைத்தொகையை மூன்று மாத காலத்திற்குள் செலுத்தப்படவேண்டும். நிராகரிக்கப்பட்ட ஏலத்தில் கலந்து கொள்வதற்காக செலுத்தப்பட்ட முன்வைப்புத் தொகையை வட்டியில்லாமல் திருப்பி தரப்படும்.

3) வெற்றிபெற்ற ஏலங்கேட்டவர் தனக்கு ஒதுக்கப்படும் மனை/கட்டிடத்தை அங்காடி நிர்வாகக்குழுவின் விதிமுறைகளின்படியே பயன்படுத்தவேண்டும்.

4) ஒதுக்கீடுதாரர் எந்த ஒரு நிபந்தனையையும் மீறும் பட்சத்தில். எந்த முன்னறிக்கையுமின்றி சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் அந்த ஒதுக்கீட்டை இரத்து செய்துவிட உரிமையுடையதாகிறது.

5) ஒதுக்கீடுதாரர்/விண்ணப்பதாரர் தனது தேர்வு நிலை குறித்து ஏலப்படிவங்களில் அளித்திருக்கம் விவரங்கள் ஏதும் தவறானதாகவோ, முறையற்றதாகவோ இருப்பதாக கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில், அந்த ஒதுக்கிட்டை முழுமையாக இரத்து செய்துவிடும் உரிமையைத் தக்கவைத்துக் கொள்கிறது.

6) வெற்றிபெற்ற ஏலதாரர் உரிய உள்ளாட்சி மன்ற அனுமதியோடு மனை ஒப்படைவு பெறப்பட்ட ஓராண்டுக்குள் மனையை அபிவிருத்தி செய்துக்கொள்ளவேண்டும். தவறுவது ஒதுக்கீட்டையே இரத்து செய்வதற்கரியதாகும்.

7) மேலும், ஏதும் விவரங்கள் தேவையாயின், முதன்மை நிர்வாக அலுவலர், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் அல்லது அலுவலகத்தைத் தொடர்ப்பு கொள்ளலாம். மேலும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் இணையதள (www.cmdachennai.gov.in) முகவரியிலும் காணலாம்.)

8) வறையறுக்கப்பட்ட படிவத்துடன் மட்டுமே ஏல ஒப்பந்தபுள்ளிகள் அனுப்பப்படவேண்டும்.

9) மனுதாரர் விலைப்புள்ளி மற்றும் ஏலத்திற்கான உரையினை முத்திரையிட்டு அதற்கான உரிய படிவத்தில் சமர்ப்பிக்கவேண்டும் பிணைவைப்புத்தொகை என எழுதி வரைவோலையினை ஒரு உரையிலும் மறறொரு உரையின் மீது விலைப்புள்ளி என எழுதி ஏலத்திற்க்கான படிவத்தினை முத்திரையிட்ட உரையில் சமர்பிக்க வேண்டும், பிணைவைப்புத்தொகை செலுத்தி சமர்ப்பிக்கபடாத விண்ணப்பங்கள் எற்கப்படமாட்டாது. ஒவ்வொரு மனைக்கும் தனித்தனியாக விண்ணப்பம் சமர்பிக்கவேண்டும்.